CC.NO. 33/2025 தேதி: **04.02.2026**

**அசா 2 திரு. முத்து த/பெ சுவாமிநாதன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நாங்கள் ஆய்வாளர்கள் தனிதனியான வாகனத்தில் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் சரிதான். ஆய்வாளர்கள் தனிதனியான வாகனத்தில் சென்றோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் எந்த திசையில் சென்றோம் என்று எதிரி எந்த திசையில் நின்று கொண்டிருந்தார் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவயிடமானது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றும், கடைகள் அதிகம் உள்ள பகுதி என்றும், போக்கு வரத்து அதிகம் நடைபெறும் பகுதி என்றால் சரிதான். நாங்கள் அருகில் உள்ள நபர்களை சாட்சியாக இருக்கும்படி அழைக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் எதிரியிடமிருந்து எந்த கையொப்பமும் பெறவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் எதிரியிடமிருந்து தடயபொருளை கைப்பற்றியதாக சொல்லப்படும் நேரம் காலை 8.45 மணி என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலை 7.45 மணிக்கு எதிரியை கைது செய்தோம். தடயபொருளை வெள்ளைநிற சாக்குபையை கைப்பற்றியதாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றாலும், கைப்பற்றுதல் மகசரில் வெள்ளைநிற சாக்குபை காணப்படவில்லை என்றால் சரிதான். எதிரியை சொன்ன நாள் , சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றாலும், எதிரியிமிடருந்து தடயபொருள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலைய புள்ளி விவரத்திற்ககாக ஆய்வாளர் அவர்களால் போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.